**சரியான விடை**

1. (அ) முதன்மைச் சந்தை
2. (அ) விலைகள் உயருதல்
3. (இ) ஊக்கப்படுத்துகிறது
4. (ஈ) 25
5. (ஆ) உறுப்பினர்களின் நன்மைக்காக இன்றியமையாத சேவையை நிாவாகம் செய்வது
6. (ஆ) கிராமங்களிலும் நகரங்களிலும்
7. (இ) கட்டுப்பாடுடன் கூடிய செயல் சுதந்திரம் ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்
8. (இ) அரசு நிறுமம்
9. (அ) இங்கிலாந்து
10. (ஈ) கூட்டுறவுச் சங்கம்

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி 4X2=8**

**11.செபி:** இந்தியப் பங்கு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்க்காக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்.

**12.போல்ட்:** போல்ட்என்பது மும்பை பங்குச்சந்தையில் மாாச்1995 முதல் நடைமுறையில்உள்ள வணிகச் செயல்பாடாகும்

**13. .இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவா் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினாா். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். இராபா்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாவாா.

**14. .கூட்டுறவு சிறப்பங்காடி (எ-டு) :** காமதேனு – சென்னை . சிந்தாமணி – திருச்சி & கோவை கற்பகம்-வேலூா் பொன்னி - சேலம் பாண்டியன் சிறப்பங்காடி- மதுரை

**15. அரசு நிறுமம்:** ஒரு நிறுமத்தின் செலுத்தப்பட்ட **பங்கு முதலில் 51% மேல்** மைய அரசோ அல்லது மாநில அரசோ வைத்திருப்பது.அரசு நிறுமம் ஆகும். எ.கா பெல், செய்ல், மாருதி உத்யோக் போன்றவை

**16. அரசுத் தொழில்கள் அனைத்துப் பகுதிகளிலும் சமமாக வளர்ச்சி எவ்வாறு பெற்றுத் தரும்?** தொழில், உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்குத் தேவையான அனைத்து உற்பத்தித், தொழில்களை ஏற்படுத்துவதேயாகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தனியாா் துறையினர், இலாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத, மற்றும் நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை. இப்பகுதிகளில் தொழில்களை அமைக்கத் தனியாா் துறையினரை அரசு ஊக்குவிக்கலாமே தவிர, கட்டாயப்படுத்த முடியாது. அந்நிலையில் அரசு அங்கு தொழில்களை நிறுவுவது சாலச் சிறந்தது.

**ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி : 4X3=12**

| 17.முதலீட்டாளர்கள் | ஊகவணிகர்கள் (3) |
|---|---|
| 1.முதலீடுகளின் பாதுகாப்பையே பெரிதும் விரும்புவார்கள் | முதலீடுளின் மீது லாபம் பெறுவதில் குறியாக இருப்பர் |
| 2.முதலீடுகளின்மூலம் வருவாய் ஈட்டுவதையே விரும்புவர் | பத்திரங்களைவாங்கிவிற்பதின் மூலம் கிடைக்கும்லாபத்தையே விரும்புவர் |
| 3.இடர்பாடு குறைவு | இடர்பாடு அதிகம் |
| 4.நிலையான வருவாய் | நிலையற்ற ஆதாயம் |
| 5.நீண்ட காலம் ஈடுபாடும் பொறுப்புடையது | குறுகிய காலம் ஈடுபாடும் பொறுப்புடையது |

**18. புதுப் பங்குகள் எவ்வாறு வெளியிடப்படுகின்றன? (ஏதேனும் 2)** புதிய வெளியீடுகளின் சந்தை முதன்மைச் சந்தை எனப்படுகிறது. புதிய வெளியீட்டுச் சந்தைக்கென்று தனிப்பட்ட உடைமைத் தோற்றம் ஏதுமில்லை. புதிய நிறுமங்களின் புதிய பங்கு அல்லது புதிய மற்றும் இயங்கிக் கொண்டிருக்கும் நிறுமங்களின் கடன் பத்திரங்களை வெளியிடும் செயல்பாட்டைக் கொண்டதாகும். இப்பங்குகள் பொதுமக்களுக்கு வெளியிடப்படுகின்றன. இது நிதி தேவைப்படும் நிறுமங்களுக்கும் முதலீடு செய்ய விரும்பும் பொதுமக்களுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துகிறது. பொதுவாக, புதிய பங்குகளை வெளியிடும் நிறுமங்களுக்குத் தரகர்கள், பொறுப்புறுதி தருபவர்கள் வர்த்தக வங்கிகள் ஆகியவை உதவுகின்றன. நிறுமத்தின் பங்குகளை வாங்குவதற்கு விருப்பமுள்ள முதலீட்டாளர்கள் அதற்கென உள்ள படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்ப படிவங்களை தரகர்கள், பொறுப்புறுதி தருபவர்கள் ஆகியோரிடமிருந்து பெறலாம்.

**19. கூட்டுறவு சங்கத்தின் ஏதேனும் மூன்று குறைபாடுகளை விவரிக்க. 1)திறமையற்ற மேலாண்மை:**கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். திறமையுள்ள அனுபவமிக்க நபர்களை பணியில் அமர்த்த இயலாது. **2)ஒற்றுமையின்மை:** சில வேலைகளில் உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஒற்றுமையாய் இருப்பதில்லை. இதனால் கூட்டுறவு அமைப்பின் வியாபாரம் பாதிக்கப்படுகிறது. **3)உரிமையை மாற்ற இயலாமை:** கூட்டுறவுச் சங்கத்தின் பங்குகள் மாற்றியல்பு கொண்டவை அல்ல. சங்கத்திலிருந்து விலக விரும்புவோர் பங்குகளைத் திருப்பிக்கொடுத்து பங்கு முதல் தொகையைத் திரும்பப் பெறலாம். **4)கடன் வசதியின்மை:** உறுப்பினர்களுக்கு நுகர்வோர் கூட்டுறவு சங்கத்தில் கடன் வசதியளிப்பதில்லை. சரக்குகளை ரொக்கம் கொடுத்து வாங்க உறுப்பினர்கள் விரும்புவதில்லை.

**20. கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளைச் சுருக்கமாக வரைக.**
**1.தன்னிச்சையாக சேரும் சங்கம்:** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்.இவ்வமைப்பில் உறுப்பினராக சோருமாறு ஒருவரை கட்டாயபடுத்த முடியாது.ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச் சங்கத்தில் சேரலாம் விலகலாம். **2.சமத்துவம் :** கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சமம்.எல்லா உறுப்பினர்களுக்கம் சமஉரிமை உண்டு.அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது. **3.வளங்களின் இணைப்பு:** இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.அவர்களட எல்லா உறுப்பிநர்களின் நரனுக்காக இதை பயன்படுத்தகின்றனர்.

**21.அ) அரசு துறைவாரி அமைப்பு** இது அரசின் ஒரு பகுதியாக செயல்படுகிறது. அந்தந்த அமைசச்கத்தின் நிர்வாக அதிகாரிகளால் நிர்வாகம் செயய்ப்படுகிறது. இது பொதுத்துறை அமைபபில் மிகவும் பழைமையானதாகும் (எ.கா) இரயில்போக்குவரத்து, தொலைபேசி, அணுசக்தி, அனைத்திந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி.

**ஆ. தாமதம் மற்றும் முனைப்பற்ற போக்கு.**
அரசு வகுத்துத் தரும் கொள்கைகளை செயற்படுத்த வேண்டியதாகவே அரசு நிறுமங்கள் இருக்கின்றன. அரசுச் செயல்களுக்கே உண்டான தாமதம், முனைப்பற்ற போக்கும் இவை திறம்பட செயல்படுவதைத் தடை செய்கின்றன.

**22. அரசுத் தொழில்களின் நோக்கங்களை ஏதேனும் மூன்று சுருக்கமாக எழுதுக. 1.பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது:** இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.லாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள் அஞ்சும் தொழிகள் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள். **2.அடிப்படை தொழிகளின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எ.்.கு ஆலைகள் வேதிய தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிகள் அரசு தொழில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது. **3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:** சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய விரும்பும் மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர் கலால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 3X5=15**

**23.அ. துறைவாரி அமைப்பின் இயல்புகளை விவரி.**
1. தேவைப்படும் நிதி முழுவதையும் அரசே அளிக்கிறது. 2.இது அரசுக்கு முற்றும் கட்டுப்பட்டு இயங்குகின்றது. இத்துறைக்கென அமைச்சர் உண்டு. இந்நிறுவன வளர்ச்சி இயக்கம் குறைபாடுகள் பற்றி பாராளுமன்றத்திற்கும் சட்டப் பேரவைகளுக்கும் பதில் சொல்லும் கடமை அந்த அமைச்சகத்திற்கு உண்டு. 3.இதில் செங்குத்து அதிகார உறவு காணப்படுகிறது. 4.இதற்கு தேவைப்படும் நிதி பாராளுமன்ற அல்லது சட்டமன்ற நிதி அறிக்கையின் மூலம் ஒதுக்கப்படுகிறது. 5. இதன் வரவு - செலவுத் திட்டம் அரசின் கணக்குப்பதிவு முறை மற்றும் தணிக்கைக்கு உட்பட்டதாகும். 6. இது அரசின் பகுதி. எனவே அரசுக்குரிய சட்ட விலக்களிப்பு பெறுகிறது.

**23.ஆ. பங்கு மாற்றகத்தின் இயல்புகளை விளக்குக.**
வேரஸ்டின் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவு மற்றும் விற்பவர் ஒரு அடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஓரிடமே ஆகும்.
**இயல்புகள்:** அது பத்திரங்களை வாங்குதல் விற்பனை செய்தல் போன்ற செயல்கள் நடைபெறும் இடமாகும். பங்கு மாற்றகங்கள் பதிவு பெற்ற அல்லது அவ்வாறில்லாத தன்னிச்சையான சங்கமாகும். பங்கு மாற்றகங்கள் தங்களுக்காக வியாபாரம் செய்வதில்லை.தங்கள் உறுப்பினர்களுக்கு நிறுமபத்திரங்களில் வாணிபம் செய்வதற்கான வசதிகளை செய்து வருகிறது. பங்கு மாற்றகங்களில் செய்யப்படும் வியாபாரம் கடுமையான சட்ட திட்டங்களுக்குட்பட்டது. ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சட்ட திட்டங்கள் வகுக்கப்படும். ஒவ்வொரு பங்கு மாற்றகமும் தனக்குறிய சட்ட திட்ங்களை உருவாக்கி கொள்கிறது. பங்கு மாற்றகங்களின் சட்டதிட்டங்களுக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பட்ட பத்திரங்கள் மட்டுமே இங்கு கையாளப்படுகின்றன.நிறுமங்கள் அரக்கட்டளை அரசுகள் நகராண்மை கழகங்கள் போன்றவற்றினுடைய பத்திரங்களும் இங்கு கையாளப்படுகின்றன. உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நிர்வாக அமைப்பை தேர்ந்தெடுக்கின்றனர். அவ்வமைப்பு தன் உறுப்பினர்களின் நடவடிக்கைகளைச் சரியான முறையிலும் நேரடியாகவும் தேவையான அளவிலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றதாக விளங்குகிறது. உறுப்பினர்கள் மட்டுமே பங்கு மாற்றகங்களின் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.18 வயது நிரம்பிய எந்த ஒரு நபரும் பங்கு மாற்றகத்தில் உறுப்பினராக முடியும் உண்மையான முதலீட்டாளர்களும் ஊகவணிகர்களும் பங்கு மாற்றகத்தில் பங்குபளை வாங்கி விற்பனை செய்யலாம்.

**24.அ. புதிய வெளியீட்டிற்கானச் செயல்முறைகளை விவரி. 1. தகவலறிக்கை வெளியிடுதல்**. பொதுமக்களிடமிருந்து புதிய பங்குகள் வாயிலாக நிதி திரட்ட விரும்பும் நிறுமம் பொதுமக்கள் அறிந்த ஒரு நிறுமமாக இருத்தல் வேண்டும். அந்நிறுமம் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும். அதனுடைய தற்போதைய நிதி நிலைமை, எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் வாடீநுப்புகள் பற்றிப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். தகவலறிக்கை வெளியிடுவதன் மூலம் இவையனைத்தும் செய்யப்படலாம். எந்த ஒரு ஆவணம் தகவலறிக்கை என்ற பெயரில் வெளியிடப்படுகிறதோ அல்லது எந்த ஒரு சுற்றறிக்கை, விளம்பரம் அல்லது பிற ஆவணங்கள், நிறுமத்தின் பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்க பொதுமக்களை அழைக்கிறதோ அவ்வாவணம் தகவலறிக்கை எனப்படுகிறது. **2. விண்ணப்பம்** தகவலறிக்கை வெளிவந்தபின் முதலீடு செடீநுய விரும்பும் பொதுமக்கள் நிறுமத்தின் பங்குகளுக்காக விண்ணப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பப் படிவங்களைப் புதிய பங்கு வெளியீட்டில் உதவும் தரகர்கள், வங்கியர் ஆகியவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒருவர் எத்தனைப் பங்குகள் வேண்டுமானாலும் ஒரே விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்கள் தனி நபர் பெயரிலோ, நிறுமங்கள் பெயரிலோ இருக்கலாம். பொதுவாக, விண்ணப்பத்துடன் விண்ணப்பத் தொகையை விண்ணப்பதாரர் செலுத்தவேண்டும். அது ஒரு பங்குத்தொகையில் 5 விழுக்காட்டிற்குக் குறைவாக இருத்தல் கூடாது. இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பத் தொகை ஏதாவது ஒரு அட்டவணையிலிட்ட வங்கியில் இதற்கென தொடங்கப்பட்ட தனிக்கணக்கில் வைக்கப்பட வேண்டும். நிறுமம் பங்கு விண்ணப்பம் பெறுவதற்கு உரிய கால அளவை தகவலறிக்கையில் வெளியிடும். அது, பங்கொப்பப் பட்டியல் திறந்திருத்தல் எனப்படும். குறைந்தபட்சம் மூன்று நாட்களாவது பங்கொப்பப் பட்டியலைத் திறந்து வைத்திருத்தல் அவசியம்.

**3. பங்குமாற்றகத்தில் பட்டியலிடல்** பங்கு மாற்றகத்தில் பட்டியலிடுவதால், ஒரு நிறுமம், அதனுடைய நிதி நிலைமை, பங்குகளைச் சந்தையிடுதல் ஆகியவற்றைப் பற்றிப் பொதுமக்களின் மனதில் நம்பகத் தன்மையை ஏற்படுத்தும். புதிய வெளியீட்டின் தகவலறிக்கையில் அங்கீகரிப்பட்ட பங்கு மாற்றகத்தில் பங்குகளைப் பட்டியலிடுவதற்காக விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றிய செடீநுதி கொடுக்கப்பட வேண்டும். **4. பங்கு ஒதுக்கீடு** பங்கொப்பப் பட்டியல் திறந்திருப்பதற்கான காலக்கெடு முடிந்தவுடன் நிறுமம் விண்ணப்பதாரர்களுக்குப் பங்குகளை ஒதுக்கீடு செய்யலாம். பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டபின் ஒதுக்கீட்டாளர்கள் நிறுமத்தின் பங்குதாரர் ஆகின்றனர். குறுமப் பங்கொப்பம் பெறப்பட்டவுடன் தான் பங்கு ஒதுக்கீடு செய்யலாம். இந்த குறுமப் பங்கொப்ப அளவு பொதுமக்களுக்கு வெளியிடப்படும் மொத்த பங்குத் தொகையில் 90% இருத்தல் வேண்டும். இத்தொகை தகவலறிக்கையில் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இயக்குநரவை பாரபட்சமின்றியும் வரம்புகள் ஏதும் விதிக்காமலும் பங்கு ஒதுக்கீடு செய்தல் வேண்டும். வெளியிடப்பட்ட அனைத்து பங்குகளும் பங்கொப்பமிட்டிருந்தால் முழுவதுமாக ஒதுக்கீடு செய்யப்படலாம்.. அதிகமான பங்கொப்ப விண்ணப்பம் இருந்தால் அனைத்து இயக்குநர்கள் எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் அவர்கள் விண்ணப்பம் செய்த விகிதத்தில் அல்லது சில விண்ணப்பதாரர்களுக்கு முழுவதுமாகவும் சிலருடைய விண்ணப்பத்தைக் ரத்து செய்தும் ஒதுக்கீடு செய்யலாம். அதிக பங்கொப்பம் இருந்தால் பங்கு மாற்றியகத்துடன் கலந்தாலோசித்து ஒதுக்கீடு திட்டத்தை முடிவு செய்தல் வேண்டும். **5. ஒதுக்கீடு / வருத்த மடல்** பங்கு ஒதுக்கீடு செடீநுத பின், ஒதுக்கீட்டாளர்களுக்குக் கடிதம் அல்லது பங்கு ஆவணம் குறிப்பிட்ட நாட்களுக்குள் அதாவது பங்கொப்பப் பட்டியலின் கால அளவு முடிந்த தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும். ஒதுக்கீடு பெறாத விண்ணப்பதாரர்களுக்கு வருத்த மடலுடன் விண்ணப்பத் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்கான காசோலையையும் அனுப்புதல் வேண்டும்.

| **24.ஆ. கூட்டுப்பங்கு நிறுமம்** | **கூட்டுறவு சங்கங்கள்** |
|---|---|
| இது இலாப நோக்கோடு நடத்தப்படுவதாகும்.இது பேரளவு தொழில் செய்வதற்காக பன்மர் ஒன்றிணைந்த சங்கமாகும். | இது பொருளாதாரத்தில் நலிவடைந்த நபர்கள் தன்னிச்சையாக சேர்ந்து அமைக்கும் சங்கம். இது உறுப்பினர்களுக்கு சேவை செய்வதன் மூலம் இலாபம் ஈட்டுகிறது. |
| தனி நிறுமத்தையமைக்க குறைந்தபட்சமாக இரு நபர்களும், பொது நிறுமத்தை அமைக்க குறைந்தபட்சம் ஏழு நபர்களும் இருக்க வேண்டும். | கூட்டுறவுச் சங்கத்தை தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க சட்டம் 1983ன்படி குறைந்தபட்சம் 25 நபர்கள் தேவை. |
| தனி நிறுமத்தில் உச்ச அளவாக ஐம்பது நபர்களும், பொது நிறுமத்திற்கு வரையறை ஏதும் இல்லை | இந்த அமைப்பில் அதிகபட்சத்திற்கு வரையறை இல்லை |
| பொது நிறுமத்தில் எப்பகுதியில் வாழ்பவரும், உலகில் பல பகுதியில் வாழ்பவர்களும் பங்குதாரர்கள் ஆகலாம். | ஆனால் இச் சங்கத்தில் குறிப்பிட்டபகுதியில் வாழ்பவர் மட்டுமே உறுப்பினராக சேர்க்கப்படுவர் |
| இந்திய நிறுமச்சட்டம் 1956-ன்படி ஒரு நிறுமம் அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். | இது மாநில அரசாங்கத்தின் கூட்டுறவுச் சங்க சட்டத்தின்படி அமைக்கப்பட்டு பதிவு செய்யப்படவேண்டும். |
| கூட்டுப்பங்கு நிறுமத்தின் மேலாண்மை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்படுகிறது. | எல்லா உறுப்பினர்களும் பங்கெடுத்துக் கொள்ள உரிமையிருந்தாலும் இயக்குநர் குழுவின் உதவியால் மேலாண்மை நடத்தப்படுகிறது. |

**25.அ. ஏதேனும் எட்டு கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளை எழுதுக.** 1. வேளாண்மை கடன் சங்கம் 2. வேளாண்மை கடன் சாராசங்கம் **வேளாண்மை கடன் சங்கம்** 1. கிராமப்புற கடன் சங்கம் 2. பிரதம சங்கங்கள் **வேளாண்மை கடன் சாரா சங்கம்** 1.நகர வங்கிகள் 2. பணியாளர் சங்கம் 3. தொழிலாளிக் கடன் சங்கங்கள்
**நாணயம் சாரா சங்கங்கள் :** 1.வேளாண்மை சாரா கடன் சங்கங்கள் 2. வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள் **வேளாண்மை சாரா கடன் சங்கங்கள்** 1.கூட்டறவு சந்தையிடுதல் 2.கூட்டுறவு பண்ணைகள் 3.தொழிற்சாலை கூட்டுறவு
**வேளாண்மை சாரா கடன் சாராத சங்கங்கள்**
1.நுகர்வோர் கூட்டுறவு 2.உற்பத்தியாளர் கூட்டுறவு 3.கூட்டுறவு வீட்டு வசதி 4.கூட்டுறவு பண்டகசாலை.

**25.ஆ.போல்ட்:** என்பது மும்பை பங்குச் சந்தையில் மார்ச் 1995 முதல் நடைமுறையில் உள்ள ஒரு வணிகச் செயல்பாடாகும். **போல்ட்டின்ஆற்றல்கள்:**
1.மனித செயல்பாட்டு தொகுதிகளில் இயற்கையாகவே அமைந்திருக்கின்ற செயல் திறமின்மையை போக்குகின்றது.
2. பங்கு மாற்றங்களின் வாணிக கொள்திறனை அதிகரிக்கின்றது.
3. பொருத்தி வராத வணிகத்தை தவிர்க்கிறது.
4. அறிவிப்புகள் நடவடிக்கைகளின் நிலையை தாமதப்படுத்துவதில்லை.
5. பங்குகளின் விலைகள், குறியீடுகள் போன்ற தகவல்களை உபயோகிப்பாளருக்கு அளிக்கின்றது.
6. சிறந்த கட்டுப்பாட்டிற்கு பல வகையான வரம்புகளை விதித்திருக்கின்றது.